கூட்டம்எண். 01/2024 – 2025 ஆரணி நகராட்சி

நாள். 20.06.2024

**சாதாரணக் கூட்டம் அறிவிப்பு**

26.06.2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்
ஆரணி நகராட்சி

**திருக்குறள்**

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்.

**குறள்எண்**. 10 – 93

**பொருள்கள்**

1. நகராட்சிஆணையாளர்அவர்களின் மே 2024 மாதக் குறிப்பு
   அலுவலக் குறிப்பு: மன்றம் பதிவுசெய்யலாம்.
   **தீர்மான எண்**. 1 பதிவு செய்யப்பட்டது.
2. நகராட்சிபொறியாளர்அவர்களின் மே 2024 மாதக் குறிப்பு
   அலுவலக் குறிப்பு: மன்றம் பதிவுசெய்யலாம்.
   **தீர்மான எண்**. 2 பதிவு செய்யப்பட்டது.
3. 2023–2024ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு** . மன்றம் அனுமதிக்கலாம்.
   **தீர்மான எண்**. 3 பதிவு செய்யப்பட்டது.
4. ஆரணி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் முஸ்லீம் ஆண்கள் துவக்கப்பள்ளி, பென்ஷன் லைன், அஹலே சுன்னத் வல்ஜமாத் மஸ்ஜித் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு மாத வாடகை ரூ. 1200/– வீதம், அக்டோபர் – 2022 முதல் மார்ச் – 2024 வரை 18 மாதங்களுக்கு 1200 x 18 = ரூ. 21600/– கல்வி நிதியில் இருந்து முத்தவல்லி பென்சன் லைன் மஜ்ஜீத் என்ற பெயரில் வாடகை செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு**. மன்றம் அனுமதிக்கலாம்.
   **கோப்பு எண்**. 3906/2010/சி2
   **தீர்மான எண்**. 4 அனுமதி அளிக்கப்பட்டது.

5. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A, பிளாக் 3, நகரளவை எண். 102ல் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக திரு. K.P. நாகரத்தினம் அவர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P. No. 26656/2019ற்கு ஆரணி நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை முடித்து கொடுக்க திரு. P. சீனிவாசன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூபாய். 18000/- செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

. **அலுவலககுறிப்பு**. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**கோப்புஎண்**. 60/2017/எப்1.

**தீர்மான எண்**. 5 அனுமதி அளிக்கப்பட்டது.

6. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட C, பிளாக் 2, நகரளவை எண். 35/14ல் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக திரு. தாமோதரன் அவர்கள் சென்னை உயர்நிதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P. No. 1331/2024ற்கு ஆரணி நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை முடித்து கொடுக்க திரு. P. சீனிவாசன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்க கட்டணமாக ரூபாய் 18000/- செலுத்த கோரி இரசீது வரப்பெற்றள்ளது. மேற்காணும் வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 18000/- செலுத்த மன்றத்தின் பார்வைக்கம் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலககுறிப்பு**: .மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்புஎண்**. 1034/2022/எப்1

**தீர்மான எண்**. 6 அனுமதி அளிக்கப்பட்டது.

7. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. எம். முத்து என்பவரின் மகள் செல்வி. M. ராஜேஸ்வரி என்பவருக்கு 21.02.2024 அன்று நடைபெற உள்ள திருமணத்தை முன்னிட்டு முன்பணமாக அரசாணை எண். 234 நிதி (சம்பளம்) துறை நாள். 30.03.1995ன் படி முன்பணமாக தொகை ரூ. 10000/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்**. 259/2024/பி2

**தீர்மான எண்**. 7 அனுமதி அளிக்கப்பட்டது.

8. இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 30.04.2024 அன்று பணி ஓய்வு பெற்ற திரு. க. மதியழகன் என்பவருக்கு கீழ்க்கண்டுள்ளவாறு

1. சிறப்பு சேமநலநிதி அசல் – ரூ. 2960/-3

2. சிறப்பு சேமநலநிதி அசல்கான தொகை – ரூ. 17590/–
3. நிர்வாக பங்குத் தொகை – ரூ. 10000/–

ஆக மொத்தம் ரூ. 30550/–

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்புஎண்:** 933/2024/பி2

**தீர்மான எண்.** 8 ஒப்புதல் அளிக்கப்பட்டது

9. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 16.11.2023 முதல் 28.02.2024 வரையிலான காலத்திற்கு ஆரணி மல்லிகை சுய உதவிக்குழுவிற்கு உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண். 2833/அ3/2013, நாள். 07.02.2024ல் தெரிவித்துள்ளவாறு மேற்படி தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் பொருட்டு அவசியம் அவசரம் கருதி மீண்டும் மேற்படி குழுவிற்கு 01.03.2024 முதல் 31.05.2024 வரை பணி நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்த தினசரி கூலி அடிப்படையில் கூலி தொகை வழங்கவும். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்புஎண்:** 538/2020/எச்1

**தீர்மான எண்.** 9 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் கழிவுநீர் வாகனத்திற்கு 09.01.2024 ஆகிய தேதியோடு இன்சூரன்ஸ்

முடிவடைகிறது. அவை மேலும் ஒரு ஆண்டிற்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 97 C 7434 – ரூ. 52378/–

**அலுவலககுறிப்பு:– 1.** மன்றம்அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்புஎண்**. 634/2016/எச்1

**தீர்மான எண்.** 10 அனுமதி அளிக்கப்பட்டது

11. ஆரணி நகராட்சி 2022–2023ஆம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ. 1,47,939/– ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்**. 2706/2017/பி2.

**தீர்மான எண்.** 11 அனுமதி அளிக்கப்பட்டது.

12. ஆரணி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 30.04.2023 அன்று பணி ஓய்வு பெற்ற திரு. S. குமார் என்பவருக்கு

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறப்பு சேம நல நிதி அசல் | – | ரூ. 5,830/– |
| 2. | சிறப்பு சேம நல நிதி அசலுக்கான வட்டி | – | ரூ. 3,921/– |
| 3. | நிர்வாக பங்குத் தொகை | – | ரூ. 10,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ. 19,751/– |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்புஎண்**. 925/2024/பி2

**தீர்மான எண்.** 12 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

13. நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதத்தில் , ஆரணி நகராட்சியில் 2023–2024ஆம் ஆண்டு வரை நிலுவை உள்ள சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்களை வரும் ஜீன் 30க்குள் 100 சதவீதம் வசூலிக்கப்பட

வேண்டும் எனவும், 2024–2025 ஆம் ஆண்டு நடப்பு கேட்பில் 30சதவீதம் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சியின் வசூல் பணி துரிதப்படுத்தும் வகையில் நிர்வாக நலன் கருதியும், சொத்துவரி, குடிநீர் இணைப்புகளுக்கான ஒருங்கிணைந்த கேட்பு அறிவிப்புகள் ஆரணி நகர வரிவிதிப்புதாரர்களுக்கு விநியோகம் செய்யும் பட்சத்தில் பொது மக்கள் நகராட்சியில் வந்து வரியினை செலுத்த ஏதுவாக இருக்கும் என்கின்ற நோக்கத்தில், இந்நகராட்சியில் சொத்துவரி வரிவிதிப்புகள் 15904 குடிநீர் இணைப்பு வரி விதிப்புகள் 6211 உள்ளன. மேற்குறிப்பிட்டவாறு கேட்பு அறிவிப்புகள் அரசு அங்கீகாரம் பெற்ற திருவண்ணாமலை மாவட்ட எழுதுப் பொருட்கள் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடேட் திருவண்ணாமலை அச்சடித்து கொள்ளவும், அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ. 60,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினம் நகராட்சி

வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்**. 1124/2024/அ1

**தீர்மான எண்.** 13 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனங்களுக்கு 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான காலத்திற்கு சாலை வரி, பசுமைவரி, சேவைவரி ஆகியவை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| TN 25 BY – 7803 | – | 11050/– |
| TN 97 C – 7434 | – | 14200/– |
| | **Total** | 25250/– |

**அலுவலககுறிப்பு:**– 1.மன்றம் அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தொகையினை உடனடியாக செலுத்தும் பொருட்டு நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திரு.செ.இந்திராபாண்டியன், ஓட்டுநர் மூலமாக தொகை செலுத்தி மீண்டும் தனியருக்கு SELF ஆக வழங்க மன்றம் ஏற்கலாம். மேலும் KAY YES CONSTRUCTIONS, VELLORE தனியார் மையத்திடம் ஒப்படைக்கப்பட்ட TN25 BY 7803 வாகனத்திற்கு நகராட்சி மூலம் தொகை செலுத்தி மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்படும் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்**. 634/2016/எச்1

**தீர்மான எண்.** 14 அனுமதி அளிக்கப்பட்டது.

15. ஆரணி நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு சீருடை வாங்கி வழங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 2,50,000/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:– 1. அரசு நிறுவனமான கோ–ஆப் டெக்ஸில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன்கீழ் சப்ளை உத்தரவு மற்றும் செலவினம் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.** 3480/2014/எச்1

**தீர்மான எண்.** 15 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு மற்றும் மழைகால நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 01.03.2024 முதல் 31.05.2024 வரையிலான காலத்திற்கு ஆரணி மல்லிகை சுய உதவிக்குழுவிற்கு பணி நீடிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண். 2833/அ3/2013, நாள். 22.05.2024ல் தெரிவித்துள்ளவாறு மேற்படி தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் பொருட்டு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் விதிகள் நடைமுறையில் உள்ளதால் பணியின் அவசியம் அவசரம் கருதி தேர்தல் நடத்தை விதிகள் முடியும் வரை மீண்டும் மேற்படி குழுவிற்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கப்படுகிறது. மேலும், மேற்படி சுய உதவிக்குழுவிற்கு மீண்டும் 06.06.2024 முதல் 31.08.2024 வரை பணி நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2, பணியின் அவசியம் அவசரம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர்

நிர்ணயித்த தினசரி கூலி அடிப்படையில் கூலி தொகை வழங்கவும்.

மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்**: 538/2020/எச்1

**தீர்மான எண்.** 16 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

17. நாடாளுமன்ற தேர்தல் 2024 முன்னிட்டு ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு 100% சதவிதம் வாக்குபதிவு செய்வது குறித்து சிறப்பு விழிப்புணர்வு பிரச்சார கலை நிகழ்ச்சி நடத்திட முனைவர் திருநங்கை V.N.ராணி ,சிவசக்தி கிராமிய கலைக்குழு விருத்தாசலம் அவர்கள் கோரியதற்கிணங்க தேர்தல் விழிப்புணர்வு என்பதால் மேற்படி கலைகுழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998ன்கீழ் விதி 57(7)ன் படி 11.04.2024 மற்றும் 12.04.2024 ஆகிய தேதிகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்திட அனுமதிக்கப்பட்டதினை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. மேலும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்**: . 720/2024/எச்1

**தீர்மான எண்.** 17 அனுமதி அளிக்கப்பட்டது.

18. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Dr. அம்பேத்கார் நகர், காஜிவாடை, காந்தி ரோடு, கார்த்திகேயன் ரோடு, பெரியசாயக்கார தெரு, களத்துமேட்டு தெரு, தாது சாகிப் தெரு ஆகிய பகுதிகளில் JCB மற்றும் டிராக்டர் கொண்டு கழிவுநீர் கால்வாய் தூர்வாருதல் பணிமேற்கொள்ள வேண்டிய நிலையில் நாடாளுமன்ற தேர்தல் விதிகள் நடைமுறையில் இருந்ததால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகளின் சட்டம் 1998ன்கீழ் விதி 57ன் படி விலைப்புள்ளி கோரி மேற்படி பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டதினையும் செலவினம் மேற்கொண்டதினையும் மன்ற பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

**கோப்பு எண்**: 862/2024/எச்1

**தீர்மான எண்.** 18 பதிவு செய்யப்பட்டது.

19. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி 33 வார்டுகளில் JCB மற்றும் டிராக்டர் கொண்டு கழிவுநீர் கால்வாய் தூர்வாருதல் பணிமேற்கொள்ள ஓராண்டிற்கு தோராய செலவினம் ரூ.3,00,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண் :** 862/2024/எச்1

**தீர்மான எண்.** 19 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

20. ஆரணி நகராட்சியில் ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நிரேற்று நிலையம் கமண்டல நாகநதி நிரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் கொண்டு வந்து மேல் நீர்தேக்க தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், நகரில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான ஆட்கள் மற்றும் பொறியியல் பிரிவில் அலுவலக பயன்பாட்டு உதவியாளர்கள் போதிய ஊதியர்கள் அலுவலகத்தில் இல்லாததால் மேற்கண்ட இடங்களில் இரவு காவலர்கள், குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான ஆட்கள், மின் மோட்டார் இயக்குபவர்கள், தெரு விளக்கு பராமரிப்பு செய்பவர்கள்தனியார் ஸ்ரீ சாய்பாபா ஆண்கள் குழு மூலம் ஆட்கள் பெறப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். F3/834075/2023 ஆண்டிற்கான SKILLED LABOUR ஒரு நாள் கூலி 391/– வீதம் 12 பணியாளர்களுக்கு வழங்கவும், Driver ஒரு நாள் கூலி ரூ. 592/– வீதம் 1 பணியாளர்களுக்கு வழங்கவும் ஏற்கனவே ந.ம. தீர்மான எண். 35, நாள். 30.06.2023இல் நவம்பர் 2023 முடிவடைந்துள்ளதால் மேலும் டிசம்பர்–2023 முதல் மே 2024 வரை 6 மாதங்களுக்கு, குடிநீர் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு பணியில் ஆறு மாதங்களுக்கான செலவினத்தொகை ரூ. 8.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடப்பட்டதற்கு நகரமன்ற பின்னேற்பிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாளர்களுக்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.** 1046/2023/இ1

**தீர்மான எண்.** 20 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

21. ஆரணி நகராட்சியில் ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம் கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் கொண்டு வந்து மேல் நீர்தேக்க தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான ஆட்கள் மற்றும் பொறியியல் பிரிவில் அலுவலக பயன்பாட்டு உதவியாளர்கள் போதிய ஊழியர்கள் அலுவலகத்தில் இல்லாததால் மேற்கண்ட இடங்களில் இரவு காவலர்கள், குடிநீர் பராமரிப்பு

பணிகளுக்கு தேவையான ஆட்கள், மின்மோட்டார் இயக்குபவர்கள், தெரு விளக்கு பராமரிப்பு செய்பவர்கள் தனியார் ஸ்ரீ சாய்பாபா ஆண்கள் குழு மூலம் ஆட்கள் பெறப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். எப்3/834075/2023 ஆண்டிற்கான SKILLED LABOUR ஒரு நாள் கூலி ரூ. 391/– வீதம் 12 பணியாளர்களுக்கு வழங்கிட ஜீன்–2024 முதல் நவம்பர் – 2024 வரையிலான ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள உத்தேசமான செலவினத்தொகை ரூ. 8.50 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகரமன்ற தலைவரின் முன் அனுமதியில் வேலை உத்தரவு

வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** 1046/2023/இ1

**தீர்மான எண்.** 21 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

22. ஆரணி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு குப்பைகள் அகற்றும் பணிக்கு, புதியதாக வாங்கப்பட்ட 12 வாகனங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யவும் சாலை வரி, பசுமைவரி மற்றும் பதிவு கட்டணங்கள் ஒரு வாகனத்திற்கு ரூ. 31,000/– முறையே 12 வாகனத்திற்கு ரூ. 3,72,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:** 0991/2024/இ1

**தீர்மான எண்.** 22 அனுமதி அளிக்கப்பட்டது.

23. ஆரணி நகராட்சி வார்டு எண். 10 நகராட்சி அலுவலகம் எதிரில் உள்ள வெங்கட்ராமன் பூங்காவினை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் பூங்காவினை மராமத்து பணிகள் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நகரமன்ற தலைவர் தெரிவித்ததிற்குகிணங்க, பூங்காவினை ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடியாக ஆய்வு செய்து மராமத்து பணிகள் செய்ய அறிவுறுத்தியதிற்கிணங்க மேற்படி பணியை செய்ய தோராய மதிப்பீடு ரூ. 1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள

அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** /2023/இ1

**தீர்மான எண்.** 23 அனுமதி அளிக்கப்பட்டது.

24. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்ட மைதானத்தில் நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ள கைபிடிகள் மற்றும் சுற்றுசுவர் பழுதடைந்துள்ளதை சரி செய்ய வேண்டும் என்று செய்திதாள்களிலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோரின் நேரடி உத்தரவிற்கிணங்க மேற்படி பணியை செய்ய தோராய மதிப்பீடு ரூ. 300000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** /2023/இ1

**தீர்மான எண்.** 24 அனுமதி அளிக்கப்பட்டது.

25. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சியில் 66257 மக்கள் தொகை உள்ளது. தினசரி ஒரு நபருக்கு 90LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கமண்டல நாகநதி, தச்சூர், ஆற்காடு முப்பதுவெட்டி தலைமை நீர் இறைவை நிலையங்களில் இருந்து தினசரி 6.00 MLD தண்ணீர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர் தொட்டிக்கு வருகிறது இதன் மூலம் மேல் நீர் தேக்க தொட்டி 7 எண்ணிக்கை கொள்ளவு 31.00 இலட்சம் லிட்டர் நீர்யேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது, பொது மக்களின் நலன் கருதி குடிநீரில் திரவ குளோரின் கலந்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது, மேற்காணும் திரவ குளோரின் (HYPOCHLORIDE SOLUTION) கொள்முதல் செய்திட ஓராண்டுக்கு உத்தேசமான தொகை ரூ. 9.00/- (ஒன்பது இலட்சம்) குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** /2024/இ1

**தீர்மான எண்.** 25 அனுமதி அளிக்கப்பட்டது.

26. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கமண்டல நாகநதி நீர் இறைவை நிலையம் மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் மின் கோளாறு காரணமாக 20 HP மோட்டார் 2 எண்ணிக்கை பழுது ஆகி உள்ளது, மோட்டாரை கழற்றி பார்த்ததில் காயில் எரிந்து தீய்ந்துவிட்டது. எனவே காயில் மாற்றி பம்பு சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது, குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மோட்டார்களின் பழுதினை சரி செய்ய தோராய செலவின்ம் ரூ. 65,000/- நகரமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** /2024/இ1

**தீர்மான எண்.** 26 அனுமதி அளிக்கப்பட்டது.

27. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் TN 25 AX 9318, TN 25 AU 6961, TN 97 C 5499 ஆகிய வாகனங்களுக்கு ஒவ்வொரு பத்தாயிரம் கிலோமீட்டர்களுக்கு ஒருமுறை ஆயில்சர்வீஸ், பழுது நீக்கம் மற்றும் ஜெனரல் செக்கப் செய்யவும் வாகனம் கொள்முதல் செய்த நிறுவனத்திலே பணிசெய்ய 2024 – 2025 ஆம் நிதியாண்டிற்கான தோராய செலவினத் தொகை ரூ. 600000 இலட்சத்திற்கு மன்றத்தின்அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** 1. மன்றம்அனுமதிக்கலாம்.

2. அலுவலக ஈப்பு TN 25 AU 6961 வண்டியினை ஜெயின்கார்ஸ் வேலூர், நிறுவனம் மூலம் பழுது சரிசெய்து பட்டியல் தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்.**0896/2024/இ1

**தீர்மான எண்.** 27 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

28. ஆரணி நகராட்சி மூலம் நடைபெறும் பணிகளுக்கான ஒப்பந்தங்கள், மத்திய மாநில அரசின் நல திட்டங்கள் மற்றும் நகராட்சியால் பொதுமக்களுக்கு செய்யப்படும் அறிவிப்பு விளம்பரங்கள் முறையே (செய்தித்தாள், உள்ளூர்தொலைக்காட்சி, ஆட்டோ விளம்பரம் ஆகியவை) விளம்பர கட்டணங்கள் செலுத்திட தோராய செலவினம் ஓராண்டுக்கு ரூ. 3,00,000/– இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** மன்றம்அனுமதிக்கலாம்,

**கோப்புஎண்.** 1083/2024/இ1

**தீர்மான எண்.** 28 அனுமதி அளிக்கப்பட்டது.

29. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர் லாரி TN 25 AX 6476 வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற பசுமை கட்டணம், சாலைவரி, மற்றும் காப்பீட்டு கட்டணங்கள் செலுத்த தோராய செலவினம் ரூ. 3,00,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** மன்றம்அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்.** 0896/ 2024/இ1

**தீர்மான எண்.** 29 அனுமதி அளிக்கப்பட்டது.

30.ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் மற்றும் தண்ணீர் லாரி ஆகிய வாகனங்களுக்கு 2024 – 2025ஆம் நிதியாண்டிற்கான காப்பீட்டு கட்டணம் செலுத்த தோராய செலவினத் தொகை ரூ.3,00,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**– மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்.** 0896/2024/இ1

**தீர்மான எண்.** 30 அனுமதி அளிக்கப்பட்டது.

31. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சியில் 66257 மக்கள் தொகை உள்ளது. தினசரி ஒரு நபருக்கு 90LPCD வீதம் 1 நாளைக்கு 6.2MLD இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதற்கான நீ ர்இறைவை நிலையங்கள் (PUMP HOUSE) விவரம், 1.கமண்டல நாகநதி (3KM), 2.தச்சூர் செய்யாற்று ஆற்றுபடுகை, 3.ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீர் இறைவை நிலையம் (45km) தூரத்திலிருந்து வரும் பிரதான பம்பிங்மெயின் குழாய் 350MM, 300MM, 250MM விட்டமுள்ள பைப்லைன் மூலம் குடிநீர் நகரப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு நகரபகுதிகளுக்கு 65KM நீளத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு குடிநீர் கொண்டு வரும் குழாய்களில் எதிர்பாராமல் ஏற்படும் குழாய் வெடிப்புகள் (BURST) நீர்கசிவு (LEAKAGE) CABLE பணிக்கு குழிகள் தோண்டும் போது ஏற்படும் உடைப்புகள் நகராட்சியில் கால்வாய் கட்டும் பணி மற்றும் உடைப்பு ஏற்படுகிறது. இதனை சரிசெய்யவும் தலைமை நீர் இறைவை நிலையங்களில் மோட்டார்காயில் கட்டும் இதர பழுது ஏற்பட்டால் சரி செய்திடவும் செலவினமாக ஓராண்டுக்கு உத்தேசமான தொகை ரூ.9.50/– (ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம்) குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்புஎண்.** 849/2024/இ1

**தீர்மான எண்.** 31 அனுமதி அளிக்கப்பட்டது.

32. இந்நகராட்சிக்கு அனைத்து பிரிவுகளுக்கம் தேவையான 12A Tonner 20 எண்ணிக்கை, 328A Tonner 10 எண்ணிக்கை, Keyboard 10 எண்ணிக்கை மற்றும் Mouse 10 எண்ணிக்கை ஆகியவற்றை திருவண்ணாமலை மாவட்ட எழுதுபொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருவண்ணாமலை மூலம் பெறப்பட்ட செலவினம் தொகை ரூ. 57,500/– யை மேற்கண்ட கூட்டுறவு சங்கத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**கோப்பு எண்** : 1198/2024/சி1
**தீர்மான எண்.** 32 அனுமதி அளிக்கப்பட்டது.

33. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கடைகளின் வாடகை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் GST சரக்கு மற்றும் சேவை வரி தொகையை 33AAALC1292J2ZC என்ற அரசு தலைப்பில் GST return Filling செய்தமைக்கான Auditor Fees கட்டணம் (01.01.2022 முதல் 31.03.2024) வரை தொகை ரூ. 54,000/– வழங்க கோரி திரு. சேகர் Auditor, ஆரணி அவர்களிடமிருந்து Bill பட்டியல் வரப்பெற்றுள்ளது, மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**கோப்பு எண்.** 1556/2018/அ3
**தீர்மான எண்.** 33 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

34. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பெரியார் மாளிகை மேல்மாடி கடைகள் 27 , பழைய பேருந்து நிலைய கடைகள் – 3 , புதிய பேருந்து நிலைய கடைகள் – 3 , பழைய மார்க்கெட் பில்டிங் கடைகள் – 8 , IUDP கடைகள் –7 , தாய் சேய் நல விடுதி கடைகள் –1 மொத்தம் – 49 கடைகள் காலியாக உள்ளது , மேற்படி காலியாக உள்ள கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ,பொது ஏல அறிக்கையினை விளம்பரம் செய்யவும் அதற்க்கான தோராய செலவினம் ரூ.30,000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .
**அலுவலக குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**கோப்பு எண்.** 906/2021/அ3
**தீர்மான எண்.** 34 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

35. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தினை நடைமுறைபடுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு நகரின் தூய்மை காத்தல் குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தும் வகையில் "என் குப்பை என் பொறுப்பு" என்கிற தலைப்பில் மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கொரு கழிவறை, டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு போன்றவற்றின் விழிப்புணர்வுகளை 18.12.2023 மற்றும் 19.12.2023 ஆகிய தேதிகளில் கலை நிகழ்ச்சிகள் மூலம் பொது மக்கள் மத்தியில் நடத்திய திருமதி. வெ. விமலா, வெங்கடாஜலபதி நாடக சபா, சென்னை என்பவருக்கு தொகை ரூ. 30,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**கோப்பு எண்.** 720/2024/எச்1.
**தீர்மான எண்.** 35 அனுமதி அளிக்கப்பட்டது.

36. இந்திய நாடாளுமன்ற பொது தேர்தல் – 2024 நடைபெற உள்ளதால் ஆரணி தொகுதியில் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட தேர்தல் நடைபெறும் கண்ணப்பன் நகராட்சி தொடங்கப்பள்ளி, சுப்பிரமணி சாஸ்திரி

பள்ளி, அம்சவேணி நகராட்சி பள்ளி, ஆதிபகவான் பள்ளி, அனந்தபுரம் நகராட்சி பள்ளி மற்றும் MD பள்ளி ஆகிய வாக்குசாவடிகளில் சாய்தளம், கழிவறை வசதி, தடுப்புச்சுவர் (Barrigaurd) ஆகிய பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண். அ5/1665617/2024, நாள். 04.04.2024 உத்தரவின்படி மேற்படி பணிகள் செய்ய தோராய மதிப்பீடு ரூ. 3,50,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57(A)ன் கீழ் மேற்படி பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. இப்பணிக்கு பட்டியல் தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்.** 849/2024/இ1.

**தீர்மான எண்.** 36 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

37. இந்திய பாராளுமன்ற பொது தேர்தல் – 2024 நடைபெற உள்ளதால் ஆரணி தொகுதியில் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட தேர்தல் நடைபெறும் 57 வாக்குசாவடிகளில் அடிப்படை வசதிகள் பந்தல், மின்சாதன பொருட்கள், விளக்குகள், மின் விசிறி, தண்ணீர் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண். அ5/1665617/2024, நாள். 04.04.2024 உத்தரவின்படி மேற்படி பணிகள் செய்ய தோராய மதிப்பீடு ரூ. 13,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57(A)ன் கீழ் மேற்படி பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. இப்பணிக்கு பட்டியல் தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்.** 849/2024/இ1.

**தீர்மான எண்.** 37 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

38. ஆரணி நகராட்சியில் ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம் கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் கொண்டு வந்து மேல் நீர்தேக்க தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெரு விளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான ஆட்கள் ஊழியர்கள் அலுவலகத்தில் இல்லாததால் மேற்கண்ட இடங்களில் இரவு காவலர்கள் மின் மோட்டார் இயக்குபவர்கள், தெரு விளக்கு பராமரிப்பு செய்பவர்கள் தனியார் ஸ்ரீ அஞ்சநேய ஆண்கள் குழு மூலம் ஆட்கள் பெறப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். எப்3/834075/2023 ஆண்டிற்கான SKILLED LABOUR ஒரு நாள் கூலி ரூ. 391/– வீதம் 12 பணியாளர்களுக்கு வழங்கவும் ஏற்கனவே நகர மன்ற தீர்மான எண். 39, நாள். 30.06.2023 தொடர்ந்து அனுமதி பெறப்பட்டது. ஆகஸ்ட் 2023 அன்று முடிவடைந்ததால் அதன் தொடர்ச்சியாக 30.08.2023யில் அனுமதி பெறப்பட்டு செப்டம்பர் 2023 முதல் 6 மாத காலத்திற்கு பிப்ரவரி 2024 வரை முடிவுற்றது. மேற்கண்ட பணியில் குடிநீர் அவசர அவசியம் கருதி மேலும் (மார்ச் 2024 முதல் செப்டம்பர் 2024) ஆறு மாதங்களுக்கான செலவினத்தொகை ரூ. 8.50/– இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகரமன்ற பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாளர்களுக்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.** 1046/2023/இ1.

**தீர்மான எண்.** 38 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

39. இந்நகராட்சியின் கீழ்க்குறிபிட்டுள்ள குத்தகை இனங்களை அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008–ன்படி கீழ் காணும் குத்தகை இனங்களில் வரிசை எண்: 1,2,3,4,8 உள்ள இனங்களுக்கு 2012–2013 முதல் 2023–2024 ஆம் ஆண்டு வரையில் பொது ஏலம் கோரப்பட்டும் ஏல பொறுப்பு தொகை மற்றும் குத்தகை தொகை அதிகமாக உள்ளது என கருதி ஏலம் எடுக்க எவரும் முன் வர வில்லை , எனவே துறை மூலமாக குத்தகை வசூல் செய்யப்பட்டு வருகிறது, இந்நிலையில் துறை வசூல் செய்திட போதுமான அலுவலர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது மற்றும் நகராட்சிக்கு ஓராண்டிற்கு மொத்தமாக வரவேண்டிய குத்தகை வருமானம் வருவதில்லை எனவே வருவாய் ஆய்வாளர் ஏலப்பொறுப்பு (Deposit ) தொகையினை மறு நிர்ணயம் செய்து 19.06.24–ல் குறிப்பு வழங்கியுள்ளார் அதனடிப்படையில் , ஏல பொறுப்பு(Deposit) தொகையை

கீழ் கண்டவாறு நிர்ணயம் செய்து ,அதன்படி 2024-2025 முதல் 2026-2027 வரை மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமையை பொது ஏலம் விடுவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏல நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | ஏல விளம்பரம் | ஏல பொறுப்பு தொகை | சொத்து சான்றிதழ் ரூ | தாசில்தாரிடமிருந்து சால்வன்சி பெறாதவர்கள் ஏலத்தின்போது செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | 5,00,000/- | 5,00,000/- | 10,00,000/- |
| 2 | டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு காப்பி, முறுக்கு இட்லி ரொட்டி பழம் ஆகிய இதர தட்டுக் கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | 50,000/- | 100,000/- | 1,00,000/- |
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல செய்து கொள்ளும் உரிமம் | 50,000/- | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 50,000/- | 1,00,000/- | 2,00,000/- |
| 5 | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000/- | 10,00,000/- | 5,00,000/- |
| 6 | புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,50,000/- | 10,00,000/- | 5,00,000/- |
| 7 | டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் கட்டண | 3,00,000/- | 10,00,000/- | 5,00,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | | | |
| 8 | டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000/- | 2,00,000/- | 3,00,000/- |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரிசை எண்: 1,2,3,4,8 உள்ள குத்தகை இனங்களுக்கு ஏலப்பொறுப்பு தொகை மிகவும் கூடுதலாக இருப்பதால் 2012-2013 முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரையில் பொது ஏலம் கோரப்பட்டும் ஏலம் எடுக்க யாரும் முன் வர வில்லை ,எனவே வருவாய் ஆய்வாளர் குறிப்பின்படி தற்போது ஏலப்பொறுப்பு (Deposit ) தொகையை மறு நிர்ணயம் செய்ததை மன்றம் ஏற்கலாம், மேலும் பொது ஏலம் கோரவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேலும் வரிசை எண்: 1-ல் உள்ள குத்தகை இனத்திற்கு பேருந்து நிலையம் 'B' பிரிவு மற்றும் 'C' பிரிவு அங்கீகாரம் புதுப்பித்தல் குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் ஆரணி அவர்களுக்கு 30.04.2024 தேதியில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது,பேருந்து நிலையம் புதுப்பிக்கப்பட்டவுடன் பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம் .

**கோப்பு எண்.** 277 /அ3/2024

**தீர்மான எண்.** 39 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

40. ஆரணி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தலைவர்கள் பிறந்த நாட்களை சிறப்பிக்கும் வகையில் மகாத்மாகாந்தி மற்றும் காமராஜர் சிலைகளுக்கு வர்ணம் பூசுதல் பராமரித்தல் பணிக்கு ஒரு ஆண்டுக்கு தோராய செலவினம் ரூ. 65,000/- நகரமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.** 849/2024/இ1

**தீர்மான எண்.** 40 அனுமதி அளிக்கப்பட்டது.

41. அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை, நாள் 24.08.2022ன் படி, ஆரணி நகராட்சியில் உள்ள வார்டு எண்கள் 01 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தம் வழங்க அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2-SWM-12, நாள் 10.01.2023ன்படி நாள் ஒன்றுக்கு 21.46 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை கையாள டன் ஒன்றுக்கு ரூ.4042.73 வீதம் வழங்க அனுமதித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சி வேலை உத்தரவு ந.க.எண்.2019/2022/எச்1, நாள்:08.05.2023ன்படி M/S. KAY YES Constructions Katpadi, Vellore என்ற நிறுவனத்திற்கு 01.06.2023 முதல் ஆரணி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது வரை மேற்படி நிறுவனம் பணிகள் மேற்கொண்டு வருகிறது.

M/S. KAY YES Constructions Katpadi, Vellore என்ற நிறுவனத்தின் முதலாம் ஆண்டு ஒப்பந்த காலம் 31.05.2024 அன்று முடிவடைவதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு (01.06.2024 முதல் 31.05.2025 வரை) பணி நீட்டிப்பு செய்ய மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** M/S. KAY YES Constructions Katpadi, Vellore என்ற நிறுவனத்திற்கு 01.06.2024 முதல் 31.05.2025 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 2019/2022/எச்1

**தீர்மான எண்.** 41 அனுமதி அளிக்கப்பட்டது.

42. ஆரணி நகராட்சி வார்டு எண். 31, களத்துமேடு பகுதியில் 5 எண்ணிக்கையிலான சிறுபாலங்கள் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கு இடையுறாக இருப்பதால் அப்பகுதி நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படி அப்பகுதியில் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை 2024-25ம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:** /2023/இ1

**தீர்மான எண்.** 42 அனுமதி அளிக்கப்பட்டது.

43. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தரம்பிரித்து வாங்கிடும் பணியினை Outsourcing Agency Key Yes Construction மூலம் மேற்க்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தினசரி சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பைகளை 4 MCC மையங்களுக்கு அனுப்பப்பட்டு இயற்கை உரம்

தயாரிக்கப்படும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை (Dry Waste) அந்தந்த MCCக்களில் சேகரம் செய்யப்பட்டு வாரம் இருமுறை லாரியில் கொண்டு சென்று பள்ளிப்பட்டு அருகில் கொடிவலசா கிராமத்தில் உள்ள ஸ்ரீ சிவசக்தி பாலிமேர்ஸ், நிறுவனத்தில் ஒப்படைக்கப்படுகிறது. நகராட்சி வாகனங்கள் Outsourcing வசம் ஒப்படைக்கப்பட்டதால் Dry Waste கொண்டு செல்லும் பணிக்கு தனியார் வாகனங்கள் பயன்படுத்திக்கொள்ள உள்ளூர் தனியார் வாகன உரிமையாளர்களிடம் விலைப்புள்ளி (Quotation) கோரி மேற்படி பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் வாகன உரிமையாளரின் விலைப்புள்ளியினை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கவும் அதற்குண்டான செலவினைத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணம் (SUC) நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**கோப்பு எண்.** 2019/எச்1/2022

**தீர்மான எண்.** 43 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

44. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் விதமாக சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து அப்புறப்படுத்திடவும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு ஒரு மாட்டிற்கு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) அபராதம் வசூலிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 1298/2020/எச்1

**தீர்மான எண்.** 44 அனுமதி அளிக்கப்பட்டது.

45. சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014-ன் படி ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதார பாதுகாப்பு வழங்கும் பொருட்டும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 159, நாள். 02.11.2015-இல் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்தல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து, அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று (Vending Certificate) வழங்கப்பட்டது. தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் திட்டம் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) மற்றும் விதிகள்2015ன் விதி 11-ன் கீழ் நியமனம் மற்றும் தேர்தல் முறையில் உறுப்பினர்கள் நியமித்து நகர விற்பனைக் குழு செயல்பட்டு வந்தது. மேற்படி விதிகளின்படி நகர விற்பனைக் குழுவிற்கான ஐந்தாண்டு காலம் முடிவடைந்து விட்டபடியாலும், தற்போதைய நிலையில் சாலையோர

வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து (Town Vending Committee) புதிய நகர விற்பனைக் குழு ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 20789/2021/UPA, நாள். 07.06.2024 தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிணங்க தற்போது மீண்டும் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 245 எண்ணிக்கையிலான நபர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் மற்றும் வியாபார சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சாலையோர வியாபாரிகளுக்கான உறுப்பினர் தேர்தல் நடத்திட கீழ்கண்டுள்ளவாறு இடஒதுக்கீடு முறையினை பின்பற்றி நடப்பில் உள்ள சாலையோர வியாபாரிகளில் இருந்து தேர்தல் நடத்தி நகர விற்பனைக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

## உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்டோர் | 1– எண்ணிக்கை |
| 2. | மகளிர் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 3. | மாற்றுத் திறனாளிகள் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 4. | சிறுபான்மையினர் வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| 6. | பொது / பிற வகுப்பினர் | 1– எண்ணிக்கை |
| | மொத்தம் | 6 |

இதன்படி தேர்தல் நடத்திட தேர்தல் அறிக்கையினை தினசரி செய்தி தாளில் வெளியிடுதல், வாக்குசீட்டுகள் அச்சடித்தல் மற்றும் தேர்தல் நடைமுறைகள் செயல்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான தோராய செலவீனம் ரூபாய். 1.50 இலட்சம் தேவை உள்ளது.

மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மேற்கூறியவாறு சட்ட விதிகளின் படி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**கோப்பு எண்**. 1320/2016/எப்1

**தீர்மான எண்.** 45 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

46. இந்திய பாராளுமன்ற தேர்தல் 2024 , ஆரணி பாராளுமன்ற தொகுதி 067 ஆரணி சட்டமன்ற தொகுதி உட்பட்ட ஆரணி நகராட்சி பகுதிகளில் தனியார் மற்றும் பொது சொத்துக்களில் அனுமதியின்றி செய்யப்பட்டுள்ள விளம்பரங்களை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் 10.12.2023 தேதிய நேரடி அறிவுரையின் பெயரில் சுவர் விளம்பரங்களை அழிக்கும் விதமாக பணி மேற்கொள்ள அளவீடு எடுக்கப்பட்டு தேர்தல் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற

ஒப்பந்ததாரர் மூலம் பணியினை செய்து முடித்து பட்டியல் தொகை ரூ. 90,000/-யினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி நடவடிக்கையினை மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்**. 123/2024/இ1

**தீர்மான எண்**. 46 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

47. ஆரணி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் ஜெயலஷ்மி நகர் பூங்கா அபிவிருத்தி செய்யும் பணி முடிக்கப்பட்டதில் திறப்பு விழாவிற்கு முன்னர் பூங்கா முன் பகுதி மற்றும் உட்பக்க நுழைவு பகுதியில் பேவர் பிளாக் தளம் அமைக்கவும், கழிவறை சுவர்களுக்கு Tiles பொருத்தவும், Watchmen Shed க்கு Fan (ம) தரைக்கு Tiles பொருத்தவும், பூங்கா உட்புறம் தாழ்வாக இருப்பதால் மழைநீர் அதிக அளவில் தேங்கக் கூடிய சூழ்நிலையை தவிர்ப்பதற்காக 30 cm உயரத்திற்கு மணல் கொண்டு நிரப்பிடவும், மின் உதிரி பொருட்களான Rope Light, LED விளக்குகள் அமைக்கவும் மற்றும் பெயர் பலகை ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்**. 2098/2022/இ1

**தீர்மான எண்**. 47 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

48. ஆரணி நகராட்சியில் வார்டு எண்கள். 4,16,23 மற்றும் 26-ல் சிறுபாலங்கள் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கு இடையுறாக இருப்பதால் அப்பகுதிகளின் நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, அப்பகுதிகளில் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்க தோராய மதிப்பீடு ரூ. 6,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்**. /2023/இ1

**தீர்மான எண்**. 48 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

கோப்பு எண். /2023/இ1

**தீர்மான எண்.** 48 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

49. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 2, பிளாக் . 6, வார்டு C, கோட்டை வடக்கு தெரு நகராட்சி அலுவலக கட்டிடம் பின்புறத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் ரூ. 188.25 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டதில், விரைவில் அக்கட்டிட துவக்க விழா நடைபெற இருப்பதால் கட்டிட வளாகப் பகுதியில் சாலை மட்டத்திற்கு ஏற்ப WMM நிரப்பி, பேவர் பிளாக் தளம் அமைக்கவும், Brass-ல் பெயர் பலகை பொருத்தவும் மற்றும் 6 எண்ணிக்கையில் தீ ஆணைப்பான் கருவி வாங்கி பொருத்தவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

3.மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 535/2022/இ1

**தீர்மான எண்.** 49 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

நகராட்சிஅலுவலகம்,
ஆரணி.
நாள். 20.06.2024.

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.